# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590


## ஆணை நாள் – 08.07.2026
**(காணொளி காட்சி விசாரணை)**

## முன்னிலை
**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 14885/A/2023**

திரு. செ. ரவிச்சந்திரன் -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது),
ஊராட்சி ஒன்றியம், அரிமளம், -- பொது அதிகார அமைப்பு
புதுக்கோட்டை மாவட்டம்.

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (08.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | திரு.செ.ரவிச்சந்திரன் அவர்கள் ஆஜராகவில்லை |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது | |
| பொது அதிகார அமைப்பு | திரு. நா. சீனிவாசன்,<br>பொதுத் தகவல் அலுவலர் / துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது)<br>ஊராட்சி ஒன்றியம், அரிமளம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்கள் ஆஜராகவில்லை<br><br>தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது<br><br>திரு.எம்.கிருஷ்ணகுமார்,<br>துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) |

| | |
|---|---|
| | ஊராட்சி ஒன்றியம், அரிமளம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 09.06.2023 |
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் ஊராட்சி ஒன்றியம், தேக்காட்டூர் ஊராட்சி காயாம்பட்டியில் வசித்து வரும் க. பன்னையன், க. மாரியாயி, ப. பாக்கியராஜ் மூவருக்கும் வீட்டு வரி எதன் அடிப்படையில் வழங்கப்பட்டது என்றும் அதன் நகல் மற்றும் அதற்காக வழங்கப்பட்ட ஆவணங்களின் நகல்களை வழங்க கோரி விண்ணப்பித்துள்ளார். | |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள் | ---- |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 14.07.2023 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | |
| பிரிவு 19(3) இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 17.08.2023 |

2. இன்றைய தின விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலரின் சார்பாக ஆஜரான திரு.எம்.கிருஷ்ணகுமார், பொதுத் தகவல் அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்), ஊராட்சி ஒன்றியம், அரிமளம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு ந.க. அ2/1406/2023, 07.07.2023 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத்தகவல் அலுவலராலும், ந.க அ2/1406/2023 24.08.2023 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலராலும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

3. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மனுதாரர் கோரிய தகவல்களுக்கு உரிய தகவல்கள் பொதுத்தகவல் அலுவலரால் எனவே, பொதுத்தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து பின்வருமாறு உத்தரவிடுகிறது:-

- ***மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள தகவல்களுக்குரிய தகவல்களை "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சலக இணையதள ஒப்புகை சீட்டின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 12.08.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகின்றது.***

**ஓம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 14885/A/2023</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது),
ஊராட்சி ஒன்றியம்,
அரிமளம்,
புதுக்கோட்டை மாவட்டம் - 622 201.

**<u>மனுதாரர்</u>**
திரு. செ. ரவிச்சந்திரன்,
1669 காயாம்பட்டி,
தேக்காட்டூர் அஞ்சல்,
திருமயம் தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம்.

Copy to file

KRM/PA 13.07.2026